**கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகம் - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பல்கலைக்கழகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம்

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 48 ஆவது பந்தியின் பிரகாரம் வருமானம் மற்றும் செலவினங்கள் ஈடுசெய்ய முடியாதிருந்த போதிலும் 03 சந்தர்ப்பங்களின் போது கூட்டுமொத்தமாக ரூபா 3,705,256 | 2024 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

ஆன வருமானங்களில் கூட்டுமொத்தமாக ரூபா 2,564,662 செலவினம் ஈடுசெய்யப்பட்டு தேறிய வருமானமாக ரூபா 1,140,594 காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூற்றுக்களின் பிரகாரம் பணிக்கொடை ஒதுக்கீடுகள் ரூபா 150,326,884 ஆக இருந்த போதிலும் விரிவான பட்டோலையின் படி அப்பெறுமதி ரூபா 173,923,589 ஆனமையால் ரூபா 23,596,706 இணக்கமின்மை காணப்பட்டது. | பணிக்கொடை ஒதுக்கீடுகள் கணிப்பீடுகள் கணனி மூலம் Excel பயன்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்படுவதுடன் அதில் ஏற்பட்டிருந்த குறைபாட்டினால் அந்த குறைபாட்டுடன் ரூபா 150,326,884 நிதிக்கூற்றுகளில் சீராக்கப்பட்டுள்ளது. | நிதிநிலைமைக் கூற்றில் பட்டோலைகளின் மீதியுடன் இணக்கம் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் 07 தொகுதிகளுக்குரிய 12,499 விடயங்களின் சொத்துக்கள் பௌதீக ரீதியில் காணப்படுகின்றமையை உறுதிப்படுத்தாமல் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வு புத்தகங்களிலிருந்து அகற்றப்பட்டு ரூபா 16,061,374 சொத்துக்கள் அகற்றல் நட்டமாக நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | பௌதீக மெய்மையாய்வின் மூலம் 2023 இன் இறுதிக் கணக்குகளுக்கு பௌதீக ரீதியில் காணப்படுகின்ற சொத்துக்களை மாத்திரம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. தொலைந்து போன சொத்துக்கள் காணப்படுமாயின் அது தொடர்பாக முறையான விசாரணை மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யும் பணிகள் 2024 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யும் தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | சொத்துக்களைப் புத்தகங்களிலிருந்து அகற்றும் செயற்பாடுகளை முறையாக மேற்கொள்ளல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் போது கிடைக்கப்பெற்ற ரூபா 2,180,659 ஆண்டின் வருமானமாக இனங்காணப்படாமல் நேரடியாக நிதியக் கணக்கில் செலவு வைக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் பற்றாக்குறை மற்றும் நிதியக் கணக்கின் மீதி அப்பெறுமானத்தால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்து. | இதில் குறிப்பிடப்பட்ட நிதியத்தின் விசேட நோக்கங்களுக்காக ஸ்தாபிக்கப்பட்ட நிதியமாக இருந்ததுடன் அந்த நிதியங்களின் நோக்கங்களின் தன்மையின் பிரகாரம் அதற்கான பெறுவனவுகள் நேரடியாக உரிய நிதியக் கணக்குகளில் சீராக்கப்படுகின்றது. | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது ஆண்டின் வருமானம் சரியாக இனங்கண்டு கணக்கு வைத்தல் வேண்டும். |
| (ஈ) | ஊழியர் மருத்துவக் காப்புறுதிக்காக 2023 யூலை 01 முதல் 2023 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் செலுத்தப்பட்ட ரூபா 1,836,124 ஆன பல்கலைக்கழக பங்களிப்பு பல்கலைக் கழகத்தின் செலவினமாக கணக்கீடு செய்வதற்கு பதிலாக பெறவேண்டிய காப்புறுதி தவணைப்பணமாக கணக்கீடு செய்யப்பட்டடிருந்தது. அதன் காரணமாக ஆண்டின் பற்றாக்குறை மற்றும் பெறவேண்டிய மீதி அப்பெறுமானத்தால் முறையே குறைத்தும், அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | இது 2024 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்தவற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது ஆண்டிற்குரிய செலவினங்களை சரியாக இனங்கண்டு கணக்கு வைத்தல் வேண்டும். |
| (உ) | 2024 ஆம் ஆண்டின்போது நிலையான முதலீடாக வைப்புச் செய்யப்பட்ட ரூபா 21,064,300 மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் முதலீடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசு மீதி மற்றும் முதலீட்டுப் பெறுமதி என்பன அப்பெறுமானத்தால் முறையே குறைத்தும், அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | அந்த முதலீடு நிலையான வைப்புக்களில் வைப்பிடல் 2024 ஆம் ஆண்டின் சனவரி மற்றும் மார்ச் மாதங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நிதிநிலைமைக் கூற்று தயாரிக்கப்படுகின்ற திகதியில் உள்ளவாறு காணப்படுகின்ற சொத்துக்கள் சரியாக இனங்கண்டு கணக்கு வைத்தல் வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| உடன்படிக்கை மற்றும் பிணைமுறிகளை மீறிய இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய கூட்டுத்தொகையான ரூபா 2,842,485 தொகை 2024 மே 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு தவறியிருந்தது. | 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அறவிட வேண்டியிருந்த உடன்படிக்கை மற்றும் பிணை முறிகளின் பெறுமதி ரூபா 3,175,801 ஆகும். 2024 மே வரையில் அது ரூபா 2,842,485 வரை குறைவடைந்துள்ளது. | அறவிட வேண்டிய பணத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்தவேண்டிய பணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 01 வருடம் முதல் 08 வருடங்கள் வரையிலான காலம் கடந்திருந்த கூட்டுமொத்தமான ரூபா 16,742,520 ஆன வைப்புக்கள் மற்றும் நிறுத்திவைக்கப்பட்ட மீதி மற்றும் 2017 ஆம் ஆண்டிலிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 9,493,459 கூட்டுத்தொகையான 06 மூலதன முற்பண மீதிகள் மீளாய்வாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்த்துவைக்கப்பட்டிருக்க வில்லை. | வைப்பு மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட மீதிகள் எதிர்காலத்தில் செலுத்துவதற்கு ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்படுகின்ற மிகுதி கொடுப்பனவுகளின் போது முற்பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | நீண்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) ஏனைய செலுத்த வேண்டிய செலவினங்களில் உள்ளடக்கப்பட்ட இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 1,429,689 மீளாய்வாண்டின் போதும் தீர்த்துவைக்கப்பட்டிருக்க வில்லை. | இதற்குரிய கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் பெறப்படுவதுடன் மீதியினை தீர்த்து வைப்பதற்கு 2024 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11(அ) பிரிவு | உரிய அமைச்சரினதும், நிதி அமைச்சரினதும் முன் அங்கீகாரம் பெறப்படாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 10,000,000 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | நிதிக்குழுவின் அங்கீகாரம் மற்றும் நிருவாக சபை பரிந்துரையுடன் இந்த நிதி முதலீடு செய்யப்பட்டுள்ளது. | நிதிச்சட்டத்தின் பிரகாரம் முறையான பிரகாரம் அங்கீகாரம் பெற்று முதலீடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 103, 104 | பெறுமதி ரூபா 1,097,359 அளவிலான 3,940 நூலகப் புத்தகங்கள் தொலைந்து போனமை தொடர்பில் 2024 மார்ச் வரையிலும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக விசாரணை செய்து அறிக்கையொன்றை பெற்றுக்கொள்வதற்காக 2020 யூலை 23 ஆம் திகதி நடைபெற்ற 201 ஆவது நிருவாக சபைக் கூட்டத்தின் மூலம் 05 அங்கத்தவர்களை உடைய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் குழுவின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2022 ஏப்ரல் 26 ஆம் திகதிய இலக்கம் 2022/03 என்ற தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் 03 (viii) பிரிவு | சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு முரணாக ஊழியர் மருத்துவக் காப்புறுதி திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 3,672,249 பல்கலைக்கழகத்தால் செலவிடப்பட்டிருந்தது. | ஒட்டுமொத்த தவணையில் 75 சதவீதம் ஊழியரினால் செலவிடப்படுகின்ற பல்கலைக்கழகத்தின் இடவசதிகள் மின்சார தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான வாடகைக்கு வழங்கி உழைக்கப்பட்ட நிதியம் இதற்காக பயன்படுத்தப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2023 சனவரி 18 ஆம் திகதிய இலக்கம் BD/HRD/126/ 214/19/2023 | பிணைமுறியை மீறிய விரிவுரையாளர்களிடமிருந்து மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்ட ரூபா 787,958 அரசாங்க வருமானத்தில் செலவு வைப்பதற்கு | பிணை முறியை மீறிய விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட்ட பணம் விசேட நிதியம் (Restricted Funds) ஒன்றின் கீழ் பேணிச் | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | என்ற திறைசேரி செயலாளரின் கடிதம் | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செல்லப்பட்டுள்ளது. | |
| (உ) | 2022 சனவரி 03 ஆம் திகதிய 01/2022 இன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் 4 ஆம் பிரிவு | 2022 மற்றும் 2023 ஆண்டுகளுக்காக நூலகப் புத்தகங்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்கான புள்ளிவிபர நடவடிக்கைகள் 2023 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 39,829,581 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 62,619,435 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 22,789,854 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு அரசாங்கத்தின் மூலதன மானியம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுமதி ரூபா 1,022,650,000 ஆன 03 காணிக் கூறுகள் பல்கலைக்கழகத்திற்கு சட்டரீதியாக கையேற்கும் நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. | கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகத்தால் உரிமை கோரப்படுகின்ற காணிகளை கையேற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | காணிகளின் உரித்தை சட்டரீதியாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |